**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 3 - 2020**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 3 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 03 இன் மொத்த நீளம் வெட்டியவிலிருந்து அந்தரவேவ வரை அண்ணளவாக 15 கிலோமீற்றராகும். அம்பாந்தோட்ட சர்வதேச மைய அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஆதரவளித்தல் மற்றும் ஊக்கப்படுத்தலிற்கு வீதி வலையமைப்பின் அபிவிருத்தியில் ஒரு பிரதான உருப்படியாக அடயாளப்படுத்தல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். முன்மொழியப்பட்ட தெற்கு அதிவேகப்பாதை இடமாறல் மாத்தறை தொடக்கம் பெலியட்ட (பகுதி 01) பெலியட்ட தொடக்கம் வெலிய (பகுதி 02), வெலிய தொடக்கம் அந்தரவேவ (பகுதி 03) மற்றும் அந்தரவேவ ஊடாக மத்தளை தொடக்கம் ஹம்பாந்தோட்டை (பகுதி 04) போன்ற நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் பகுதி 03 இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 36,174 மில்லியன் ஆக உள்ளதுடன் சிவில் வேலைகளின் கிரயம் ரூபா 31,574 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 252 மில்லியன் ஆகிய தொகைகள் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 சனவரி 25 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2019 ஜூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பிற்காக செலுத்தப்பட வேண்டிய தாமத வட்டிக்கான ஏற்பாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு இழப்பீட்டு கொடுப்பனவு சிரேஸ்ட செயற்திட்ட பணிப்பாளரின் அலுவலகத்தினால் செய்யப்பட்டிருந்ததுடன் ஈஎஸ்ஈபி பிரிவு 03 செயற்திட்ட அலுவலகம் காணி சுவீகரிப்பிற்கான எவ்வித நிதி அதிகாரத்தினையும் வழங்கியிருக்கவில்லை. எனவே ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | அதிவேகப்பாதையின் நிர்மான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் ரூபா 40,994 மில்லியன் தொகையான நடைமுறை வேலை மிகுதி 2020 திசெம்பர் 31 வரை கூட பூர்த்திசெய்யப்பட்ட வேலைகளிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை வேலை மிகுதியினை பூர்த்திசெய்யப்பட்ட வேலைகளிற்கு மாற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்க கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | செயற்திட்டமானது பூர்த்திசெய்யப்பட்டு அனைத்து நிலுவை மீதிகளும் தீர்க்கப்பட்டிருந்தன என நிதிக்கூற்று குறிப்பு 2.4 கூறுகின்ற போதிலும் கூட்டுமொத்தம் ரூபா 14.51 மில்லியன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலமைக்கூற்றில் தீர்க்கப்படாத மீதியாக காட்டப்பட்டிருந்தன. | கருத்துரைத்திருக்கவில்லை. | அனைத்து பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் நிலுவை மீதி சீன யொன் 27,586,539 மீதான ஒப்படைப்பு கட்டணங்களிற்காக ஓர் ஏற்பாடு செய்திருக்கவில்லை. | கருத்துரைத்திருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.02 இன் பிரகாரம் செயற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட காசு உற்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். | காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.02 இன் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள்- |
|---|---|---|---|
| (அ) | உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழாக செய்யப்பட்ட ஏற்பாட்டிற்கு முரனாக செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீதான அளவைப்பட்டியலின் வேறான கொடுப்பனவு உருப்படிகள் செய்யப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்ததாரரிற்கு செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற்றுக்கொள்ள கூட்டுமொத்தம் ரூபா 99.37 மில்லியன் ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரம் அவரது சொந்த செலவில் வழங்கப்படும் என்பதன் அர்த்தம் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் சமர்ப்பிப்பு ஒப்பந்த பீஓகியுவ் இன் எல்எஸ் உருப்படி இன் கீழ் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற ஒப்பந்ததாரர் உரித்தானதன் பின்னர் இருதரப்பினர்களிடையேயும் ஓர் ஒப்பந்தத்திற்குள் உள்வாங்குவது ஓர் முன் நிபந்தனை என சீஓசீ கூறுகின்றது. | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் சாத்தியவள கற்கையின் பிரகாரம் வெட்டியாய தொடக்கம் அந்தர்வேவ வரையான அதிவேகப்பாதையில் சேவைப்பகுதிகளினை நிர்மானிக்க அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் சேவைப்பிரிவினை வடிவமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவோ அதிவேகப்பாதையின் பயன்பாட்டாளர்களிற்காக வசதிகளினை வழங்க அதிவேகப்பாதையின் அளவைப்பட்டில்களில் ஒதுக்கீடுகளை செய்திருக்கவோ இல்லை. | எவ்வித ஈஎஸ்ஈபி ஒப்பந்த பீஓகியுவ் உம் நிர்மான கட்டத்தில் சிவில் வேலைகள் ஒப்பந்தங்களினூடாக சேவை பகுதிகளை நிர்மானிக்க ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை. | சேவைப்பிரிவினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கூட்டுமொத்தம் ரூபா 3.5 மில்லியன் ஆர்டிஏ உத்தியோகத்தர்களின் சம்பளங்களிற்காக மேந்தலைச்செலவினங்களாக செயற்திட்டத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரைத்திருக்கவில்லை. | செயற்திட்டங்களிலிருந்து மேலதிக மேந்தலை கிரயங்களை அரவிடுவதனை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 காணி சவீகரிப்பு செயன்முறையில் தாமதம்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காணி சுவீகரிப்பு செயன்முறையானது 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 26 வாரங்களிற்குள் காணி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி விவைபடுத்துவதற்காக கூட்டு மொத்தம் ரூபா 13.5 மில்லியன் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் நிலஅளவை திணைக்களத்தின் அமைச்சு, மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் பிரதேச செயலக அலுவலகம் போன்றனவற்றின் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு செயன்முறை இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | காணி சுவீகரிப்பு கிரயத்தின் கொடுப்பனவுகளிற்காக வங்கி கடன்களை பெற்றுக்கொள்ளல், இழப்பீடுகளின் கொடுப்பனவு ஒவ்வொரு ஈஎஸ்ஈபி பிரிவின் காணி சுவீகரிப்பிற்கான நிதிகளின் ஒதுக்கம் மற்றும் காணி சுவீகரிப்புடன் தொடர்புபட்ட அனைத்து வேலைகள் என்பன எஸ்பிடி இனுடைய அலுவலகத்தினால் செய்யப்பட்டிருந்தது. அதன்படி ஈஎஸ்ஈபி பிரிவு 03 செயற்திட்ட அலுவலகம் காணி சுவீகரிப்பிற்கான எவ்வித நிதி அதிகாரத்தினையும் வழங்கியிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு செயன்முறையினை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 3,029 காணித்துண்டுகள் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதில் 2,182 காணித்துண்டுகளிற்கான இழப்பீட்டு கொடுப்பனவாக ரூபா 1,108.61 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 74.2 மில்லியன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 769 காணித்துண்டுகளிற்காக மாத்திரம் தாமத வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட எவ்வித காணித்துண்டுகளையும் காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்ய தவரியிருந்தது. | மேற்கூறியபடி. | காணி சுவீகரிப்பு செயன்முறையினை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |